# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2061/12 - 2018 මාර්තු මස 06 වැනි අඟහරුවාදා - 2018.03.06

*2061/12 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 132/29* (ii)

**அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கக் கட்டளைச் சட்டம்**

*(283 ஆம் அத்தியாயமான) அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கக் கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின்கீழ் அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கத்தால் ஆக்கப்பட்டு நிதி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட விதிகள்.*

செயலாளர்,
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு.

கொழும்பு,
*2018*, பெப்புருவரி *20*.

விதிகள்

*1892*, யூன் *17* ஆந் திகதிய *5147* ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையும் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறானவையும் *2012*, செத்தெம்பர் *28* ஆந் திகதிய *1777/38* ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியினால் கடைசியாகத் திருத்தப்பட்டவையுமான விதிகள் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :-

(1) அத்தியாயம் 1 - பொது விதிகள் என்னும் தலையங்கத்தின்கீழ் -

(அ) விதி 6 இல் -

(1) உபவிதி (அ) வின் (i) ஆம் பந்தி இத்தால் ஒழிக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தி இடப் படுகின்றது :-

"பதவி இல்லாதாக்கப்பட்டமையின் மீது, பதவி விலகியதன் மீது அல்லது பிரிவு 7 (அ) வின்கீழ் அவரது பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதன் மீது அரசாங்கத்தின் ஓய்வூதியத் திட்டத்தின்படி அரச சேவையிலிருந்து, மாகாண அரச சேவையிலிருந்து அல்லது உள்ளூராட்சிச் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ள அல்லது 7(ஆ) (I) இன் ஏற்பாட்டின்கீழ் உறுப்பினராக இல்லாதொழிந்துள்ள எவரேனும் உறுப்பினர், 12 ஆம், 13 ஆம் விதிகளின்கீழ் பெறப்பட்ட ஒவ்வொரு கடனையும் அல்லது முற்பணத்தையும் II ஆம் அத்தியாயத்தின்கீழ்

பெறப்பட்ட ஆதனக் கடனின் ஏதேனும் மீதியையும் கொடுத்துத் தீர்க்கும்படி கோரப்படுதல் வேண்டும். இது, மொத்த உதவுதொகைக் கட்டணத்தையும், வட்டியையும், மீதித்தொகை ஏதேனுமிருப்பின் அதனையும் கொண்டிருத்தல் வேண்டும். கோரிக்கை செய்யப்படும்போது கடனைக் கொடுத்துத் தீர்ப்பதற்குக் கோரப்பட்ட கடைசித் திகதிவரை கணக்கிடுவதன் மூலம் வட்டியானது விதிக்கப்படுதல் வேண்டும்.".

(2) உபவிதி (அ) வின் (ii) ஆம் பந்தி இத்தால் ஒழிக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தி இடப்படுகின்றது :-

"12 ஆம், 13 ஆம் விதிகளின்கீழ் பெறப்பட்ட ஆதனக் கடனுக்காக எவரேனும் உறுப்பினருக்கு வரவு வைக்கப்பட்ட உதவுதொகைக் கட்டணத்தையும் வட்டியையும் கொடுத்துத் தீர்க்கும்படியும் விதி 6 (அ) (i) இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகக் கொடுத்துத் தீர்க்கும்படியும் கோரப்படுகின்ற அவ்வுறுப்பினர், அவர் நன்கொடையளிப்பவர் உறுப்பாண்மைக் கட்டணத்தைச் செலுத்துவதற்குச் சம்மதித்திருப்பின், நன்கொடை முறையான உறுப்பினராக இருக்கலாம். கடனோடு சேர்த்து மேலதிகமாக அவர் உறுப்பாண்மைக் கட்டணத்தைச் செலுத்தவிரும்பின், அவர் புதிய உறுப்பாண்மையைப் பெறக்கூடியவராகவிருக்கலாம். எவ்வாறாயினும், 13 (i) ஆம் விதியின்கீழ் சம்பளக் கடனொன்றை வழங்கும்போது அவர் புதிய உறுப்பினராகக் கருதப்படலாம்.".

(ஆ) விதி 13 இல் -

(1) அதன் பட்டியலில், கடன் உரித்துடைமைகள் அட்டவணையின் II ஆம் நிரலின் 6 ஆம் விடயத்திலுள்ள நேரொத்த பதிவில், "ரூபா 80,000" என்னும் சொல்லுக்கும் எண்களுக்கும் பதிலாக "ரூபா 90,000" என்னும் சொல்லையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(2) விதி 13 (அ) வில், "ரூபா 7,500" என்னும் சொல்லுக்கும் எண்களுக்கும் பதிலாக "ரூபா 10,000" என்னும் சொல்லையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(3) ஐந்தாண்டுகளைக் கொண்ட அரசாங்க சேவையைப் பூர்த்திசெய்திராத எவரேனும் உறுப்பினர், ஐந்தாண்டுகளைப் பூர்த்திசெய்துள்ள ஓர் உறுப்பினரின் அல்லது அவர்களது சேவையில் நிரந்தரமாகவுள்ள எவரேனும் இரு உறுப்பினர்களின் உத்தரவாதத்தின் மீது இக்கடனைப் பெறலாம் ;

(4) (i) விதி 13 (ஆ) வில், "ரூபா 50,000" என்னும் சொல்லுக்கும் எண்களுக்கும் பதிலாக "ரூபா 1,00,000" என்னும் சொல்லையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(ii) "6 மாதங்கள்" என்னும் சொல்லுக்கும் எண்ணுக்கும் பதிலாக "3 மாதங்கள்" என்னும் சொல்லையும் எண்ணையும் இடுவதன் மூலமும் ;

(5) விதி 13 (ஈ) இல் "ரூபா 50,000" என்னும் சொல்லுக்கும் எண்களுக்கும் பதிலாக "ரூபா 1,00,000" என்னும் சொல்லையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(6) விதி 13 (ஓ) இல் -

(i) அதன் (i) ஆம் பந்தியில், "பத்தாயிரம் ரூபாவிலான விசேட முற்பணத் தொகையொன்று" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அதிகபட்சம் இருபத்தையாயிரம் ரூபாவிலான விசேட முற்பணத் தொகையொன்று" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ii) விதி 13 (ஓ) வின் (ii) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(iii) பட்டப்பின் பட்டமொன்றை (கலை முதுமாணி, தத்துவவியல் முதுமாணி, விஞ்ஞான முதுமாணி) பின்பற்றுகின்ற உறுப்பினரொருவருக்கு 1,00,000 ரூபாவான கடனொன்றை வழங்குதல் வேண்டும். இக்கடன், அவரது மாதாந்தச் சம்பளத்தின் 40% அதிகபட்சக் கழிப்பனவு எல்லைக்கமைய, ஆண்டொன்றுக்கு 10% வட்டி வீதத்தில், 60 சமமான மாதாந்தத் தவணைப் பணங்களில் மீளச்செலுத்தப்படுதல் வேண்டும் ;

(iv) பதவியில் நிரந்தரமாகவுள்ள அல்லது தகுதிகாண்நிலைக் காலப்பகுதிக்கமைய நிரந்தரமான பதவியொன்றுக்கு ஆட்சேர்க்கப்படுகின்ற எவரேனும் உறுப்பினருக்கு ஆண்டொன்றுக்கு 12% என்ற வட்டி வீதத்தில் 30 சமமான மாதாந்தத் தவணைப் பணங்களிலான மீள்கொடுப்பனவின் மீது முகாமைக் குழுவினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுடன் மோட்டார் சைக்கிளொன்றைக் கொள்வனவு செய்வதற்கு அதிகபட்சம் 2,00,000 ரூபாத்தொகை வழங்கப்படலாம் ;

(v) பந்தி (iv) இன்கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்காக, அரசாங்க சேவையில் ஐந்தாண்டுகளைப் பூர்த்திசெய்திராத எவரேனும் உறுப்பினர், ஐந்தாண்டுகளைப் பூர்த்திசெய்துள்ள ஓர் உறுப்பினரின் அல்லது அவர்களது சேவையில் நிரந்தரமாகவுள்ள எவரேனும் இரு உறுப்பினர்களின் உத்தரவாதத்தின் மீது இக்கடனைப் பெறலாம்.".

(இ) விதி 14 (3) இல் -

(1) பந்தி (i) இத்தால் ஒழிக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தி இடப்படுகின்றது :-

"(i) பந்தி (ii) மற்றும் (iii) என்பவற்றில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்துள்ளவரும், ஐந்தாண்டுகளுக்கு மேற்பட்ட உறுப்பாண்மையைக் கொண்டுள்ளவருமான எவரேனும் உறுப்பினருக்கு 55,000 ரூபாவான நன்கொடையொன்று வழங்கப்படுதல் வேண்டும் ;"

(2) பந்தி (iv) இத்தால் ஒழிக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தி இடப்படுகின்றது :-

"(iv) "மருத்துவ நன்கொடை நிதியம்" எனவறியப்படும் நிதியமொன்றைத் தாபிப்பது சட்டமுறையானதாதல் வேண்டும் ; சங்கத்தின் ஒவ்வோர் உறுப்பினரும் மாதாந்தம் 25 ரூபாவை அதற்கு வரவுவைத்தல் வேண்டும்.";

(3) அந்த விதியின் (vi) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(vii) 10,000 ரூபா வரை ஒளிக்கோட்ட வில்லைப் பரிமாற்றச் சத்திரசிகிச்சைக்காக வழங்கப்பட்ட தொகையில் அதிகரிக்கப்பட்ட 7,500 ரூபா";

(ஈ) விதி 15 (ii) ஐ உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(iii) (அ)பகிரங்க சேவை பரஸ்பர சகாயச் சங்க உறுப்பினர்கள் ஓய்வுபெறுகைப் படியொன்றுக்கு உரித்துடையோராவர். ஓய்வுபெறுகையில் ஓய்வுபெறுகைப் படியைச் செலுத்துதல், 2015.01.01 ஆந் திகதியிலிருந்து பயனுறும்.

| | |
|---|---|
| (அ) 2015.01.01 முதல் 2015.12.31 ஆந் திகதி வரை ஓய்வுபெற்றுள்ள உறுப்பினரொருவர் | ரூபா 10,000 |
| (ஆ) 2016.01.01 முதல் 2016.12.31 ஆந் திகதி வரை ஓய்வுபெற்றுள்ள உறுப்பினரொருவர் | ரூபா 12,000 |
| (இ) 2017.01.01 முதல் 2017.12.31 ஆந் திகதிவரை ஓய்வுபெற்றுள்ள உறுப்பினரொருவர் | ரூபா 14,000 |
| (ஈ) 2018.01.01 ஆந் திகதியன்று அல்லது அத்திகதிக்குப் பின்னர் ஓய்வு பெற்றுள்ள உறுப்பினரொருவர் | ரூபா 15,000 |

(ஆ) சேவையிலுள்ள ஒவ்வோர் உறுப்பினரும் உதவுதொகையாக 20 ரூபாவான கட்டணமொன்றைச் செலுத்துதல் வேண்டுமென்பதுடன், அது 2014.10.01 ஆந் திகதியிலிருந்து அத்தகைய உறுப்பினரிடமிருந்து கழிக்கப்படுதலும் வேண்டும்.".

(உ) விதி 17 இல் -

(1) 17 ஆம் விதியின் (1) ஆம் பந்தி இத்தால் நீக்கப்படுகின்றது.
(2) 17(ii) என்னும் விதியை 17(i) என்னும் விதியாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;
(3) விதி 17 (i) என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய விதிகளை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(ii) இயைபான விதியில் குறிப்பிடப்பட்ட வட்டி, கடன் செலுத்தப்பட்ட திகதியிலிருந்து உரிய செலுத்துகைத் திகதி வரையிலான நாட்களின் எண்ணிக்கைக்குத் தொகையை விகிதாசாரப்படி கணக்கிடுவதன் மூலம் அறவிடப்படுதல் வேண்டும் ;

(iii) முகாமைக் குழுவானது, அரசாங்க மற்றும் சந்தை ஏற்ற இறக்க வட்டி வீதங்களைக் கவனத்திற்கொள்வதன் மூலம், திறைசேரிப் பிரதிச் செயலாளரின் ஒருப்பாட்டுக்கமைய, சங்கத்தினால் வழங்கப்பட்ட கடன்களுக்கான வட்டி வீதத்தையும் வட்டியையும் திருத்துவதற்குத் தத்துவம் கொண்டுள்ளது ;

(iv) சங்கத்திடமிருந்து பெறப்பட்ட கடன்களுக்கான வட்டி, இயைபான விதியின்கீழ் குறித்துரைக்கப்பட்ட வட்டி வீதத்தில் ஒவ்வொரு மாதத்திலுமுள்ளவாறான குறைந்து வருகின்ற மீதியின் மீது செலுத்தப்படுதல் வேண்டும். ஏதேனும் விதியின்கீழான கடனொன்றுக்கான வட்டி வீதம் குறித்துரைக்கப்பட்டிராவிடின், அத்தகைய கடனுக்காக ஆண்டொன்றுக்கு 8% வட்டி விதிக்கப்படுதல் வேண்டும்.";

(ஊ) விதி 19 இல் "அவ்வாறு திரண்ட வட்டி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அவ்வாறு திரண்ட கடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(எ) விதி 25 இன் (iii) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(iv) உறுப்பினரொருவர், முகாமைக் குழுவின் உறுப்பினரொருவராகப் பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்காகத் தகைமை பெறுவதற்கு ஐந்தாண்டுகளைக் கொண்ட முனைப்பான உறுப்பாண்மைக் காலத்தைப் பூர்த்திசெய்தல் வேண்டும். கழிப்பனவு ஒவ்வொன்றும், முகாமைக்குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான நியமனப்பத்திரங்களைக் கோருகின்ற முடிவுத் திகதிக்கு முன்னர் தொடர்ச்சியான ஆறு மாதங்களுக்காக நியமத்தர், முன்மொழிபவர் மற்றும் வழிமொழிபவர் என்போரின் சம்பளத்திலிருந்து அல்லது ஓய்வூதியத்திலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும். எவரேனும் உறுப்பினர் ஆறு மாதங்களினுள் ஓய்வுபெறுவதற்குள்ளாராயின், கட்டணங்களைக் கொடுப்பனவு செய்வதன் மூலம் உறுப்பாண்மை நாளதுவரையாக்கப்படுதல் வேண்டும். ".

(2) அத்தியாயம் II என்னும் தலையங்கத்தின் கீழ் -

(அ) விதி 5 இன் பந்தி (i) இத்தால் ஒழிக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தி இடப்படுகின்றது :-

"ஆதனக் கடனுக்காக முகாமைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொகையின் முதலாவது 3,00,000 ரூபாவுக்காக விதிக்கப்பட்ட வட்டி ஆண்டொன்றுக்கு 10 சதவீதமாக இருத்தல் வேண்டுமென்பதுடன், மீதித்தொகைக்காக விதிக்கப்பட்ட வட்டி ஆண்டொன்றுக்கு 12 சதவீதமாதலும் வேண்டும்." ;

(ஆ) விதி 6 ஐ விதி 6 (1) என மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(இ) விதி 6 இன் மீள இலக்கமிடப்பட்ட (i) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலம் :-

(i) ஆதனக் கடனொன்றைப் பெற்றபின்னர் அதிகபட்சக் காலப்பகுதியினுள் இரண்டாவது தடவையாக ஆதனக் கடனொன்றுக்கு விண்ணப்பிக்கப்படுமிடத்து, முன்னைய மதிப்பீட்டறிக்கையில் குறிப்பிடப்பட்ட பெறுமதி முன்னைய கடனின் மீதித்தொகையினதும் இரண்டாவது கடன்தொகையினதும் கூட்டுமொத்தத்தை விஞ்சுமாயின், ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் சோதனையொன்றை நடாத்துவதன்மூலம் அங்கீகார அறிக்கையொன்று பெறப்படுதல் வேண்டும். மதிப்பீட்டறிக்கை 2 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாகவிருப்பின் மற்றும் முதலாவது மதிப்பீட்டறிக்கையில் குறிப்பிடப்பட்ட பெறுமதி மேலேயுள்ள கூட்டுமொத்த மதிப்பீட்டை விஞ்சுமாயின், அங்கீகாரமொன்று தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.".

(ஈ) விதி 10 இன் (i) ஆம் பந்தி இத்தால் ஒழிக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தி இடப்படுகின்றது :-

"(i) கடனானது, 300 மாதாந்த தவணைப்பணங்களில் அல்லது அத்திகதியில் 80 வயதுக்கு மேற்படுமுன்னர், இவற்றுள் எது முதலில் நிகழ்கின்றதோ அப்பொழுது, மீளச் செலுத்தப்படுதல் வேண்டும்;"

(உ) விதி 6அ வின் பந்தி (V) இத்தால் ஒழிக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தி இடப்படுகின்றது :-

"(V) விதி 6அ (1) இன் கீழ் ஆதனக் கடன் அறவிடப்படும் போதெல்லாம் , கடனின் மீதியை அறவிடுவதற்கான கடைசித் திகதி வரை கடனின் நிலவுகின்ற மீதிக்காக 0.5% மேலதிகக் கட்டணம் விதிக்கப்படுதல் வேண்டும். ".

(3) அத்தியாயம் IV என்னும் தலையங்கத்தின் கீழ் -

(அ) அதன் 4 ஆம் பந்தி இத்தால் ஒழிக்கப்பட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் பந்தி இடப்படுகின்றது :-

"4.பிள்ளைகளுக்கான புத்தகங்களையும் எழுதுகருவி வகையையும் கொள்வனவு செய்வதற்காக எவரேனும் ஊழியர் 4,000 ரூபாவை விஞ்சாத கடனொன்றைப் பெறுதல் வேண்டும் ;".

(ஆ) அதன் 5 ஆம் பந்தி இத்தால் ஒழிக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தி இடப்படுகின்றது :-

"5.ஊழியரொருவர் விழா முற்பணமாக 10,000 ரூபாவை விஞ்சாத கடனொன்றைப் பெறுதல் வேண்டும்;"

(இ) அதன் 5 ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

"கணினிக் கடன்

6. ஒரு கணினியைக் கொள்வனவு செய்வதற்காக 75,000 ரூபாவை விஞ்சாத கடனொன்று உழியரொருவருக்கு வழங்கப்படலாம்.

(i) கடனானது 50 மாதாந்தத் தவணைப் பணங்களில் மீளச் செலுத்தப்படலாமென்பதுடன், வட்டியானது பத்து சதவீதம் (10%) ஆகும் ;

(ii) ஐந்தாண்டுகாலச் சேவையையுடைய அலுவலர் அல்லது ஊழியர் ஒருவர் இக்கடனுக்குத் தகவுடையவராகவுள்ளார் ;

(iii) எவரேனும் ஊழியர் 5 ஆண்டுகளுக்குக் குறைவான சேவையை உடையவராக இருப்பின், ஐந்தாண்டுகளுக்கு மேற்பட்ட சேவையுடனான இரு உத்தரவாதமளிப்போர் தேவைப்படுவர் ;

(iv) 55 வயதைப் பூர்த்தி செய்வதன் மேல் எவரேனும் ஊழியரின் சேவைக் காலப்பகுதியானது 100 பஞ்சாங்க மாதங்களுக்குக் குறைவாகவிருப்பின், மீதிக் கொடுப்பனவு அவரது பணிக்கொடையிலிருந்து அறவிடப்படுதல் வேண்டுமெனக் கூறுகின்ற வெளிப்படுத்துகையொன்று கொடுக்கப்படுதல் வேண்டும்.

(V) அவரது சம்பள எல்லையின் 40% ஏற்புடையற்பாலதாதல் வேண்டும்."

(ஈ) பந்திகள் 6, 7 என்பவற்றை முறையே பந்திகள் 7, 8 என்பனவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்.

3- 805

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.